முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை திரு. E.. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 23 நாள், திங்கட்க்கிழமை

EP.No.6/2025
இன்
OP No.15/2019
-----

ரோமன் கத்தோலிக்க திருச்சபை,
புனித வின்செண்ட் பல்லொட்டி தேவாலயத்தின்
பாதிரியார் மூலம், திருநகர், மதுரை.
... மனுதாரர்/ மனுதாரர்

/ எதிர்/

பத்மப்ரியா ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது 16.03.2026ம் தேதி என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.J.வில்லியம் கிறிஸ்டோபர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மாதவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் கட்டளை 21 விதி 35 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u> :

வழக்கு சொத்தை பொறுத்து மனுதாரர்/மனுதாரருக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் RLTOP No.15/2019ல் 27.11.2024ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி இந்த நிர் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி இத்துடன் சொத்து விவரத்தில் கண்டுள்ளதும், தீர்ப்பாணையில் கண்டுள்ளபடியுமான மனுதாரருக்கு பாத்தியபட்ட சொத்திலிருந்து எதிர்மனுதாரரை காலி செய்து அப்புறப்படுத்தி தாவா சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பு செய்ய உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரரின் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி ஆட்சேபணை செய்துள்ளார்.

4. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

5. இந்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>** :

6. இந்த மனுவில், நீதிமன்றத்தின் ஒப்படைப்பு உத்தரவின் மூலம், வழக்கு சொத்தின் உரிமையை எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கு வழங்க உத்தரவிட வேண்டி இந்த மனுவானது கட்டளை 21 விதி 35

உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், 27.11.2024ம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையின் படி வழக்கு சொத்தை காலி செய்து 2 மாதத்திற்குள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர், மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவாகி உள்ளது. எனவே, நீதிமன்றத்தின் ஒப்படைப்பு உத்தரவின் மூலம், வழக்கு சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கு வழங்க உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மேலும், வழக்கு சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும் வகையில் 27.11.2024ம் தேதியிட்ட தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கு கடந்த 6 ஆண்டு காலமாக நிலுவையில் உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், RLTOP No.15/2019ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க வேண்டி தடையுத்தரவு எதுவும் நிலுவையில் இல்லை என்பதை கருத்தில் கொண்டும், வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டியது சட்டப்படியானதாகும் என்று தீர்மானித்து, அதன்படி மனுதாரருக்கு நிறைவேற்று மனுவில் கண்ட மனுச்சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இந்த மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரரின் இம்மனு அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 23.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.03.23 16:35:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

**இணைப்பு** :

1. **மனுதாரர் தரப்பு சாட்சி** :இல்லை

2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை

4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.03.23 16:35:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

E.P.No.6/2025
in
RLTOP.No.15/2019
Order
D.D. 23.03.2026